# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு தன்னிலைப் பொருளாதாரத்தை ஊக்குவியுங்கள்!

## தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.கீதன் வேண்டுகோள்



தமிழரின் சுயநிர்ணயப் போராட்டத்திற்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து தமது கல்விகளை இழந்து தமது அங்கங்களை கூட இழந்து பொருளாதார ரீதியாக பல சவால்களை எதிர்கொண்டு வருகின்ற முன்னாள் போராளிகளுக்கு தன்னிலை பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.கீதன் தெரிவித்துள்ளார்

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், முன்னாள் போராளிகள் தமது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதில் பல சவால்களிலும் முயற்சியாளர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

இவ்வாறான சிறந்த முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் புலம்பெயர் தேசத்தில் இருக்கக்கூடிய தமிழ் உறவுகளும் உதவ வேண்டும்.

அத்துடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 08.12.2023 கதிர் 130



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## சர்வதேச தரத்திலான சதுரங்கப் போட்டி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது



யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டிகள் கொண்ட நிகழ்வு இன்றைய தினம் காலை ஆரம்பமானது. குறித்த போட்டியானது எதிர்வரும் 12 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செல்வா பலஸில் நடைபெறும் போட்டியின் ஆரம்ப நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்திய துணைத்தூதராக அதிகாரி 2➤

## இலங்கையின் பிறப்பு வீதம் குறிப்பிடத்தக்க அளவு சரிவு

இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் தொடர்பான தரவு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை படிப் படியாகக் குறைந்து வருவதாக மக்கள் 2➤

## யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் பெண் கைதிக்குத் துன்புறுத்தல்?

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பெண் கைதியொருவர் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வருவதாக , பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதியை நேற்றைய தினம் வியாழக்கிழமை பார்வையிடச் சென்றபோது, சிறைக்காவலர்கள் தன்னைத் துன்புறுத்துவதாக தம்மிடம் தெரிவித்து அழுததாக உறவினர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

அது தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (01)

## லஞ்ச் சீட் பாவனைக்கு விரைவில் தடை! கலந்துரையாடலின் போது பரிந்துரை

இலங்கையில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை குறைத்தல் மற்றும் மீள்சுழற்சி செயன்முறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்காக சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தலைமையில் கூடியது.

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை சுங்கம் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவொன்று இதற்காக அழைக்கப்பட்டது.

இலங்கையில் லஞ்ச்சீட் பாவனையால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகள் குறித்தும், புற்றுநோயை உண்டாக்கும் 2➤

## இமயமலைப் பிரகடனம் ஜனாதிபதியிடம் கையளிப்பு!



சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் மற்றும் உலகத் தமிழர் பேரவை யின் (GTF) உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். அச்சமோ சந்தேகமோ இன்றி, அனைவரும் பெருமையுடனும், நம்பிக்கையுடனும், சம உரிமையுடனும் அமைதியாக வாழக் கூடிய இலங்கையைப் பற்றிய ‘இமயமலைப் பிரகடனம்’ ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 6 முக்கிய விடயங்களை “இமயமலைப் பிரகடனம்” உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பிரகடனத்தை ஜனாதிபதியிடம் கையளித்ததன் பின்னர் இது தொடர்பில் மூன்று நிகாயக்களின் தலைமைத் தேரர்களுடன் கலந்துரையாடுவதாகவும், ஏனைய மதத் தலைவர்களுக்கும் இது குறித்து அறிவிக்கவுள்ளதாகவும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் இங்கு குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த 2➤

## கொள்ளையில் ஈடுபட்ட நபர்கள் கிளிநொச்சி பொலிசாரால் கைது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் பகுதியில் கடந்த மாதம் 29 ஆம் திகதியில் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்து 88,60,000 ரூபாய் பெறுமதியான 43 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பெண் ஒருவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், சந்தேக நபரின் வீட்டில் இருந்து ஒரு தொகை நகைகளும் ஏனைய நகைகள் தனியார் கடை ஒன்றில் அடைவு வைத்த நிலையிலும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2➤

# கொழும்பில் நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளுக்கு 16 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அதன்படி நாளை (சனிக்கிழமை) கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் கொழும்பு 15 ஆகிய பகுதிகளுக்கு குறித்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இந்த நீர் வெட்டு நாளை மாலை 5 மணிக்கு தொடங்கும் 16 மணித்தியாலங்களுக்கு அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இமயமலைப் பிரகடனம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 43 பவுண் தங்க நகைகள் பொலிசாரால் மீட்கப்பட்டு இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அத்தோடு சந்தேகநபர்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவும் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (02)

## இமயமலைப் பிரகடனம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பல வருடங்களாகப் போரால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள் கடந்த பொருளாதார நெருக்கடிக்கும் முகங்கொடுத்து பெரும் இன்னல்களை எதிர்கொண்டனர். பொருளாதார நெருக்கடியின்போது, எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் கசப்பான அனுபவங்கள் ஒரு சில மாதங்கள் நீடித்தன. ஆனால், இந்த மோசமான நிலைமையை வடக்கு, கிழக்கு மக்கள் பல வருடங்களாக அனுபவித்தனர்.

புதிய நாட்டைக் கட்டியெழுப்பும்போது புதிய பொருளாதாரம் மிகவும் அவசியம். இமயமலைப் பிரகடனம் போன்ற வெளியீடுகள் முக்கியமானவை. ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மை இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியைப் பாதித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது." - என்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டங்களில் உள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டம், அந்த மாகாணங்களை மையமாக வைத்து நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

இதன்படி, பூனரின் நகரம் எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக மாறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்திட்டத்தைப் பாராட்டிய உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள், அதற்கு தமது முழுப் பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் 'இமயமலைப் பிரகடனம்' வெளியிடக் கிடைத்தமை குறித்தும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநிதித்தவப்படுத்தி, அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க வண. மாதம்பாகம அஸ்ஸஜித்திஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதித்துறை சங்க நாயக்க வண. சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், மேல் மாகாணத்தின் பிரதான சங்க நாயக மற்றும் ஸ்ரீ தர்மரக்ஷித பிரிவின் பதிவாளர் வண. கிதலகம ஹேமசார தேரர், வஜிரவங்ச பிரிவின் பதில் மகாநாயக்க பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித அபிவிருத்தி ஆய்வு மையத்தின் தலைவருமான வண, களுபஹன பியரதன தேரர், மத்திய மாகாணத்தின் பாததும்பர பிரதம சங்க நாயக வண. நாரம்பனாவே தம்மாலோக தேரர், ராமன்ய நிகாயவின் பிரதிப் பதிவாளர் வாந்துவே தம்மவங்ச தேரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உலக தமிழர் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன், பவான் பவகுகன், வேலுப்பிள்ளை குகனேந்திரன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கலாநிதி கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், கனடாவிலிருந்து ராஜ தவரத்னசிங்கம், அமெரிக்காவிலிருந்து கலாநிதி ஜெயராஜா ஆகியோருடன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்கவும் கலந்துகொண்டனர். (அ)

## தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்தலேட்ஸ் மனித உயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் நீண்ட விவாதம் நடைபெற்று வருகிறது.

இதன்படி, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்புகளை கருத்திற் கொண்டு, லஞ்ச் சீட்களை பயன்படுத்துவதை தடை செய்ய 6 மாதங்கள் கால அவகாசம் வழங்கி, சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறை கண்காணிப்பு குழுவினால் மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது

உலகில் எந்த நாட்டிலும் லஞ்ச் சீட்கள் பயன்படுத்தப்படுவதில்லை என சுட்டிக்காட்டிய சுற்றுச்சூழல் அமைச்சக அதிகாரிகள், லஞ்ச் சீட்களை பயன்படுத்தாமல் இருப்பதன் முக்கியத்துவத்தை குழுவிடம் சுட்டிக்காட்டினர்.

சுற்றாடல் சட்ட திருத்தத்திற்காக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தக் குழு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை குறைப்பதற்கு பல விஷேட விடயங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், மீள்சுழற்சிக்காக பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் சேகரிக்கும் பொறுப்பை, அவற்றை உற்பத்தி செய்து விநியோகம் செய்பவர்களுக்கே வழங்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்துள்ளது.

இதன்படி, சட்டத்தில் திருத்தம் செய்து, பல்வேறு நுகர்வுத் தேவைகளுக்காக விநியோகிக்கப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள் மீண்டும் சேகரிக்கப்பட்டு, புதிய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி க்யூஆர் குறியீடுகளைப் பயன்படுத்தி மீள் சுழற்சி செயல்முறையில் சேர்க்கப்படுகிறதா என்பதைக் கண்டறியும் பொறிமுறைஅமைப்பு தயாரிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீள்சுழற்சி செய்வதற்காக பிளாஸ்டிக் போத்தல்களைத் திரும்பப் பெறுவதை மிகவும் திறனுள்ளதாக்க, வெற்று போத்தல்களுக்கு கணிசமான அளவு சன்மானம் வழங்கப்பட வேண்டும் என்று குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அத்துடன், தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கண்டறிந்து, அவற்றைப் பட்டியலிட்டு குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பிரதேச மேற்பார்வைக் குழுவின் தலைவர் தற்போதைய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## இலங்கையின் பிறப்பு வீதம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இவ்வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில், பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 68 ஆயிரத்து 920 ஆகக் குறைந்துள்ளது.

ஆனால், 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 321 என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 2021 ஆம் ஆண்டில், பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 84 ஆயிரத்து 848 ஆகவும், 2020 இல் 3 இலட்சத்திற்கும் அதிகமான பிறப்புகளும் பதிவாகியுள்ளன.

இந்நிலையில், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகள், பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாடு முறைகள், உலகளாவிய தொற்றுநோய்கள் போன்ற காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள மக்கள் தயக்கம் காட்டுவதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சர்வதேச தரத்திலான சதுரங்கப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ராம் மகேஷ், இலங்கை சதுரங்க கழகத்தின் தலைவர் லக்ஸ்மன் விஜேசூரிய, ஞானம் பவுண்டேசனின் உப தலைவர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்,

"யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி 2023" என்ற தலைப்பில், யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தினால் நடாத்தப்படும் இந்த போட்டியில் 800க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

சர்வதேச தரத்தில் நடத்தப்படும் இந்தச் சதுரங்கப் போட்டிகளில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் சகல வயது பிரிவிலும், இருபாலரும் கலந்து பரிசில்கள் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்வு சர்வதேச போட்டியாக அமைந்துள்ளதால், எமது பிரதேசத்தில் உள்ள சதுரங்க வீரர்கள் தங்களின் தரத்தை மேம்படுத்த இது, மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (01)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# சிறப்பான கணக்கீட்டு முகாமைத்துவம் காரைதீவு பிரதேச சபைக்கு விருது!



(வி.ரி.சகாதேவராஜா)

கொழும்பு, டிசெ. 08

இலங்கை பொது நிதி கணக்காளர் நிறுவனத்தின் சிறப்பான கணக்கீட்டு முகாமைத்துவத்திற்கான விருது காரைதீவு பிரதேச சபைக்கு கிடைத்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ரீதியிலான விருது வழங்கும் நிகழ்வின் போது இதற்கான விருது வழங்கப் பட்டது.

கடந்த வருடத்தில் பிரதேச சபையின் கணக்கு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிட்டதற்கான சிறப்பு விருதினை பிரதேச சபையின் செயலாளர் அ.சுந்தரகுமார் மற்றும் நிதி உதவியாளர் எம்.யூ.எம். சபீக் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# மாவடிச்சேனை வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான விசேட கற்றல் செயல்பாட்டு மையம்





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம் மாவடிச் சேனை வெருகலம்பதி இந்து மகா வித் தியாலயத்தில் ஏடு ஐக்கிய இராச்சியத்தின் (AEDU-UK) அனுசரணையுடன் “விசேட கற்றல் செயல்பாட்டு மையம்” நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதனூடாக அந்த பாடசாலையிலிருந்தும், அண்மித்த பாடசாலைகளிலிருந்தும் க.பொ.த சாதாரணதர, உயர்தர, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக மாண வர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடாத்தப்படும்.

இவ் நிகழ்ச்சிக்கு ஏடு ஐக்கிய இராச்சியத்தின் சார்பில் திரு சதானந்தன், இலங்கை ஏடு ஒருங்கிணைப்பாளர் வரதன், திருகோணமலை ஏடு ஒருங்கிணைப்பாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளன், அண்மித்த பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன், மூதூர் பிர தேச கல்வி இயக்குநர் திருமதி நஷீர் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள்.

# கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி 13 வயது கிரிக்கெட் போட்டியில் வெற்றி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் கல்வியமைச்சுடன் இணைந்து நடாத்தும் 13 வயது கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி அணி அம்பாறை டீ.எஸ். சேனநாயக தேசிய கல்லூரியை வெற்றி கொண்டுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுக்குட்பட்ட டிவிஷன் 3 கடினபந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி அணியும் அம்பாறை டி.எஸ்.சேனநாயக தேசிய கல்லூரி அணியும் கலந்து கொண்டன.

காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய அம்பாறை டீ.எஸ்.சேனநாயக தேசிய கல்லூரி அணி 41 ஓவர்களில் முடிவில் சகல வீக்கட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணி 34 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களை பெற்று 3 விக்கட்டுக்களால் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# கற்பிட்டி புலாச்சேனை பாடசாலையில் பெற்றோர்களால் மாணவர்கள் கௌரவிப்பு



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி புலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊர் மக்கள் முன்னிலையில் சாதரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்ற சகல மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களின் கரங்களாலேயே மாலை அணிவித்து கௌரவிக்கப் பட்டனர்.

கற்பிட்டி புலாச்சேனை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் தலைமையில் ஆசியர்கள் மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் பங்களிப்போடு இந்நிகழ்வு நடைபெற்றது.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய 31 மாணவர்களில் 22 மாணவர்கள் உயர்தரம் கற்க தகுதி பெற்று 70.79 சதவீத சித்தியை பதிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மிக்ஜம் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு ஒரு மாத ஊதியத்தை வழங்கிய தமிழக முதல்வர்



மிக்ஜம் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள பொது நிவாரண நிதிக்கு தன்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குவதாகவும், அனைத்து சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி அளித்திடுமாறும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மிக்ஜம் புயலால் கடந்த டிசம்பர் 2 முதல் 4 வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த மழை என்பது, 47 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவிலான பெருமழை. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பேரிடர் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே ஏற்பட்டுள்ள பேரிடர்.

மழைநீர் வடிகால் பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்தி இருந்ததால்தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. அதேபோல் அனைத்துத் துறைகளும் பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையில் இருந்ததும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வைத்திருந்ததும் இணைந்து மக்களைக் காத்துள்ளது.

இருப்பினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் நடைபெற்ற மீட்புப் பணிகளின் காரணமாக மூன்று நாட்களுக்குள் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி உள்ளது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மீட்புப் பணி நடந்து வருகிறது. இத்தகைய அசாதாரண நேரத்தில் அனைத்துத் தரப்பும் மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவியாக நல்லுள்ளங்கள் பலர் முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது.


எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம்.

இச்சூழலில் முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதன் தொடக்கமாக என்னுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் - நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதல்வர் பொது நிவாரண நிதிக்கு வழங்கவேண்டும், என்று கேட்டுக்கொண்டுள்ளார். (04)

## காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்!

# ஐக்கிய நாடுகளின் 99 ஆவது சட்டப் பிரிவினால் பாதுகாப்புச் சபைக்கு கொண்டுவரும் குட்டெரெஸ்




காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக, மிகவும் அபூர்வமாகப் பயன்படுத்தப்படும் ஐ.நா.வின் 99ஆவது சட்டப் பிரிவை பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் கையிலெடுத்துள்ளார்.

அந்தச் சட்டப்பிரிவின் கீழ், சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக ஐ.நா. பொதுச் செயலர்கள் கருதும் எந்தவொரு விவகாரத்தையும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கவனதுக்கு அவர்களால் கொண்டு வர முடியும்.

இது குறித்து குட்டெரெஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸாவில் மனிதாபிமானப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். இது அவசியமானது மட்டுமின்றி அவசரமான தேவையும் ஆகும்.

காஸாவில் எந்தப் பகுதியும் பாதுகாப்பானது இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. எனவே இந்த விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கு அவசரமாகக் கொண்டு வருகிறேன், என்றார்.

குட்டெரெஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் கூறுகையில், காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்காக ஐ.நா.வின் 99 ஆவது சட்டப்பிரிவை பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் கையிலெடுத்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவு, என்றார்.

ஐ.நா. பொதுச் செயலர்கள் இந்தப் பிரிவைப் பயன்படுத்தி ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கவனத்தை ஈர்ப்பது மிகவும் அபூர்வமானதாகும்.

இதற்கு முன்னர் கடந்த 1971 ஆம் ஆண்டில் அப்போதைய ஐ.நா. பொதுச் செயலர் யு தான்ட்தான் இந்தப் பிரிவைப் பயன்படுத்தினார். அப்போது நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் போர் விவகாரத்தை பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்த சட்டப்பிரிவை அவர் பயன்படுத்தினார். அந்தப் போரில் இந்தியா வெற்றி பெற்று, கிழக்கு பாகிஸ்தானாக இருந்த பகுதி பங்களாதேஷாக உருவெடுத்தது நினைவுகூரத்தக்கது. (04)

## ரஷ்யாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதித் தேர்தல் – புடினுக்கு வாய்ப்பு



ரஷ்யாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அந்த நாட்டு நாடாளுமன்றம் நேற்று ஒப்புதல் வழங்கியது.

இதற்கான அரசாணையை நாடாளுமன்ற மேலவையான தேசியச் சபை ஒருமனதாக அங்கீகரித்தது. இதையடுத்து, ஐந்தாவது முறையாக நாட்டின் தலைமையை ஜனாதிபதி புதின் ஏற்பதற்கான நடவடிக்கை மேலும் ஒரு படி முன்னேறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தேர்தலில் புடின் போட்டியிடுவாரா என்பது குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை. இருந்தாலும், அடுத்த ஆண்டுடன் அவரது பதவிக் காலம் முடியும் நிலையில், அவர் மேலும் 2 முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அரசியல் சாசனத் திருத்தத்தை நாடாளுமன்றம் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளதால் இந்தத் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்று உறுதியாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் புடின் போட்டியிட்டால் அவர் வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் கூறப்படுகிறது.

புடினுக்கு எதிரான தலைவர்கள் சிறைகளிலோ, வெளிநாடுகளிலோ இருப்பதாலும், உக்ரைன் போர் மற்றும் துணை ராணுவப் படையான வாக்னர்குழுவின் ஆயுதக் கிளர்ச்சிக்கு இடையிலும் புடினுக்கு மக்களிடையே அதிக ஆதரவு இருப்பதும் இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

அரசியல் சாசனத் திருத்தத்தின்படி விளாடிமிர் புடினால் வரும் 203 ஆம் ஆண்டு வரை ரஷ்ய அதிபராகத் தொடர முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெரு நாட்டின் முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரி மனிதாபிமான அடிப்படையில் சிறையிலிருந்து விடுதலை



பெரு நாட்டின் முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரி, மனிதாபிமான அடிப்படையில் கடந்த 8 ஆம் திகதி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1990 முதல் 2000 ஆம் ஆண்டு வரை பத்தாண்டுகள் பெரு அதிபராகப் பதவி வகித்த 85 வயதான அல்பர்டோ புஜிமோரி, அவரது ஆட்சியின் கீழ், 1990 காலகட்டங்களில், 25 பேரின் படுகொலைக்கு பின்புலமாக செயல்பட்ட குற்றத்திற்காக கடந்த 16 ஆண்டுகளாக சிறையில் இருந்தார்.

1991 ஆம் ஆண்டில், பெரு ராணுவத்தால், 8 வயதுக் குழந்தை உட்பட 15 அப்பாவிப் பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம், அதனைத் தொடர்ந்து, 1992 ஆம் ஆண்டில், 9 கல்லூரி மாணவர்கள் மற்றும் ஒரு பேராசிரியர் உள்பட 10 பேர், ராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் ஆகிய இரு படுகொலைச் சம்பவங்களும், அல்பர்டோ புஜிமோரி தலைமையிலான அரசின் அறிவுறுத்தலின் பேரில் நிகழ்த்தப்பட்டவை என்பது விசாரணையில் தெரியவந்தது.

இதனிடையே, சில ஆண்டுகள் சிலி நாட்டில் இருந்த அவர், 2007 ஆம் ஆண்டு, அங்கிருந்து பெருவுக்கு நாடு கடத்தப்பட்டார். அதன்பின், அவர் மீதான விசாரணை நடத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் மீறல் குற்றத்திற்காக, முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரிக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை, கடந்த 2009 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட நிலையில், கடந்த 16 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்தார்.

இந்த நிலையில், பெரு நாட்டின் அரசமைப்பு நீதிமன்றம் அவரை மனிதாபிமான அடிப்படையில் சிறையிலிருந்து விடுதலை செய்து உத்தரவிட்டது.

இதனிடையே, முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரி யின் விடுதலையை எதிர்த்து, சர்வதேச - அமெரிக்க மனித உரிமை நீதிமன்றம், அவரது விடுதலையை ஒத்திவைக்கக் கோரியிருந்தது. இதனை நிராகரித்த பெரு நீதிமன்றம், அல்பர்டோ புஜிமோரியை விடுதலை செய்துள்ளது.

முன்னாள் அதிபர் அல்பர்டோ புஜிமோரி விடுதலை செய்யப்பட்டதற்கு, ஐ.நா. அவையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் வோல்கர் டர்க், கண்டனம் தெரிவித்துள்ளார். (04)



# சிறுவர் துஷ்பிரயோகம் – பெண்கள் மீதான வன்முறை பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்ட வீதி நாடகம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அண்மைக்காலமாக இறக்காமம் பிரதேச செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவிற்கு சிறுவர் துஷ்பிரயோகங்கள், வீட்டு வன்முறை, குடும்ப பிரச்சினைகள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

அந்தவகையில், இறக்காமம் பிரதேசசெயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவும்,இஸ்லாமிக் ரிலீப் தன்னார்வு நிறுவனமும் இணைந்து "வன்முறையற்ற சமூகம் மகிழ்ச்சியான உலகு " எனும் கருப்பொருளின் கீழ் வீதி நாடகம் மாணவ மற்றும் சமூக பங்கேற்புடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் கிராமங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வீதி நாடகமானது, இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை, அல் அமீன் மகா வித்தியாலயம், அஸ்-ஸபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றது.

# காரைதீவுக் கடல் பரப்பில் உயிருடன் கரையொதுங்கிய பாரிய சுறா மீன்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவுக் கடற்பரப்பில் உயிருடன் கரையொதுங்கிய பாரிய சுறாமீன் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீண்டும் கடலின் ஆழமான பகுதிக்கு அனுப்பப்பட்டது.

மீனவர்கள் காரைதீவு கடற்படை முகாமிற்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த சுறாமீன் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் மீண்டும் கடலின் ஆழமான பகுதிக்கு அனுப்பப்பட்டது.




# புல்மோட்டையில் தொடரும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் வாழ்வாதார உதவித்திட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பிலால்நகர், சதாம் நகர், பட்டிகுடா ஆகிய கிராமங்களுக்கான முன்மாதிரி கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் 20 மீனவர்களுக்கு மீன்பிடி வல்லங்கள் மற்றும் உபகரணங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இத்திட்டத்திற்கு 2.5 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலை 10.30 மணி அளவில் பட்டிகுடா, களப்பு பகுதியில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் புல்மோட்டை 4 ஆம் வட்டார கிராம, பொருளாதார உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.ஏ.எம். அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்வாதார உதவி பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் உரையாற்றுகையில், இத்திட்டத்தை நீங்கள் வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, முஸ்லிம் எயிட் நிறுவனமும் பிரதேச செயலகமும் இத்திட்டத்தினை தொடர்ச்சியாக கண்காணிக்கும் எனவே வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாக பயன்படுத்தி உச்சபயனை அடைந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முஸ்லிம் எய்ட் நிறுவனம் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி தேத்தாப்பளை பகுதியில் 1230 கிலோ பீடி இலைகள் சிக்கின



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் இருந்து நாகவில்லு பகுதிக்கு கப் ரக வண்டியில் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட பீடி இலைகளை கொண்டு செல்லப்படுவதாக தம்பபன்னி கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய தேத்தாப்பளை பகுதியில் வண்டியை மறித்து சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது 41 பொதிகளில் சுமார் 1230 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்

கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் பெறுமதி சுமார் 85 இலட்சத்து மேல் எனவும் இந்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொணடு வரப்பட்டுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களையும் பீடி இலைகளையும் அதற்காக பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்தையும் நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# 18 செயலிகள் உளவு பார்த்தன என தெரிவித்து தனது பிளே ஸ்டோரிலிருந்து நீக்கியது கூகிள்




பல லட்சம் பேரால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் 18 செயலிகள், உளவு பார்த்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதனை கூகிள் தனது பிளே ஸ்டோரிலிருந்து நீக்கியது.

இஎஸ்இடி அறிக்கையின்படி, கடந்த ஓராண்டு முழுக்க கூகிள் பிளே ஸ்டோரில் இருந்த இந்த 18 செயலிகளும், பெரிய அளவில் உளவுபார்த்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த செயலிகளை பயன்படுத்துவோரின் செல்போனில் இருக்கும் ஏராளமான தகவல்களை இந்த செயலிகளை திருடியிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உளவுக் கடன் செயலிகள் மூலம் தகவல்களை திருடும் செயலிகள், அதன் மூலம் கடன் பெறுவோரிடமிருந்து அதிக வட்டிக் கேட்டு மிரட்டி, புகைப்படங்களை, செல்ஃபோனிலிருக்கும் தொடர்பு எண்களுக்கு அனுப்புவோம் என்பது போன்ற மிரட்டல்களை விடுத்து வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இஎஸ்இடி ஆய்வின்படி, கடன் கொடுக்கும் செயலிகளாக அறிமுகமாகி, மிரட்டல் செயலிகளாக மாறுவதாகக் கூறப்படுகிறது. இது பெரும்பாலும், ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசிய நாட்டு மக்களை குறிவைத்தே இயக்கப்படுகின்றனவாம். இதில் 17 செயலிகள் முற்றிலும் கூகிள் பிளே ஸ்டோரிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. ஒன்று மட்டும் புதிய அப்டேட்டுகளுடன் இந்த உளவு பார்க்கும் வசதி இல்லாமல் வந்துள்ளதால் கூகிள் பிளே ஸ்டோரில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த செயலிகளை யாரேனும் பதிவிறக்கம் செய்திருந்தால் அவற்றை அவர்களே தாங்களாக நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

அதில் ஏஏ கிரெடிட், அமோர் கேஷ், ஈஸி கிரெடிட், காஷ்வாவ், கிரெடிபஸ், பிளாஷ்லோன், கோ கிரெடிடோ, பின்னப் லென்டிங், 4 எஸ் கேஷ், ட்ரூநய்ரா, ஈஸி கேஷ் உள்ளிட்ட செயலிகளும் அடங்கும்.

## ரஷ்யாவில் பாடசாலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு மற்றவர்களைச் சுட்டுவிட்டு தற்கொலை செய்த மாணவி



ரஷ்யாவில் பாடசாலைக்குத் துப்பாக்கியுடன் சென்ற சிறுமி தன் சக மாணவர்களைச் சுட்டுவிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் ஒருவர் பலியாகியுள்ளதோடு, ஐந்து பேர் காயமடைந்துமுள்ளனர்.

காயமடைந்த குழந்தைகளில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

14 வயது சிறுமியிடம் எப்படி துப்பாக்கி வந்தது என்பது குறித்து சிறுமியின் தந்தையிடம் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். ரஷ்யாவில் கல்வி நிறுவனங்களில் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வரு கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த 2022 இல் மட்டும் ஏப்ரல் மற்றும் செப்டம்பரில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அதில் இரண்டு குழந்தைகள் உட்பட 19 பேர் கொல்லப்பட்டனர், 24 பேர் காயமடைந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. (04)

## உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக பாத்திமா நுஸ்ரத் பதவிப்பிரமாணம்



(எம்.ஏ.றமீஸ்)

பேருவளை தர்கா நகரில் முஸ்லிம் பெண் சட்டத்தரணி திருமதி பாத்திமா நுஸ்ரத் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக கடந்த 6ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், களு.முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரி (தேசியப் பாடசாலை) மாணவியும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியுமாவார்.

தர்கா நகர் நிஸாம் அமீர் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை பாஹிமா ஆகியோரின் புதல்வியும், ஏ.எல்.ஏ.ஹுபைல் (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மனைவியும், அக்கரைப்பற்று ஆதம்லெப்பை (குணம் மாஸ்டர்- முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் கொள்கை பரப்புச் செயலாளர்) மருமகளும் ஆவார்.






# பள்ளிவாசல், மத்ரஸாக்களை பதிவுசெய்ய ஏற்பாடு செய்க!

## தௌபீக் எம்.பி. கோரிக்கை



(கே.எ.ஹமீட்)

2019 ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிற்பாடு பள்ளிவாசல் மற்றும் அரபு மத்ரஸாக்களை புதிதாக பதிவுசெய்ய முடியவில்லை எனவும் அதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும்காணி அமைச்சு, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2024 வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் நிறைவடைந்து நீண்ட காலமாகியும் காணிப் பிரச்சினைகள் இதுவரையில் தீர்க்கப்படவில்லை. இது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் பேசியும் உரிய அதிகாரிகளை சந்தித்தும் எந்த முடிவும் கிடைக்கவில்லை.

கிண்ணியா கல்லறிப்பு காணி, உப்பாறு தளவா காணிகள், குச்சவெளி ஆலம்குளம், புல்மோட்டை மற்றும் ஏனைய உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


திருகோணமலையில் பிரதேசங்களுக்காய் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். இம்மாவட்டமானது. சுற்றுலாத்துறைக்குப் பிரசித்திபெற்ற மாவட்டம் என்பதால் அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உத்தியோகத்தர் குறைபாடு காணப்படுவதால் அதனையும் நிவர்த்திசெய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## தெருவிளக்கு அமைப்பு

(எம் எப். நவாஸ்)

அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தியாலயத்தின் 2003 ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவர்களின் பொருளாதார ரீதியிலான பங்களிப்புடனும் ஏனையவழிகளில் கிடைக்கப்பெற்ற பங்களிப்புடனும் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் பள்ளக்காட்டிற்கு செல்லும் பிரதான வீதியின் ஆரம்பத்தில் 13 மின்கம்பத்துடன் இணைந்த தெருவிளக்கினை பொதுமக்களின் பாவனைக்காக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ அகமது ஷாபிர் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் பாயிஸ் அவர்களது தலைமையில் அஸ்ஸிராஜ் 2003 கல்வி கற்ற மாணவர்கள் சார்பாக பிரதம ஒருங்கிணைப்பாளராக ஏ.எச்.எம் சிபாஸ் மற்றும் இன்னும் பல அதீதிகளின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2023இல் வெளியிடப்பெற்றது.